**<u>சுருக்கம்</u>**

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை – நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தை சென்னை – 25 கிண்டியில் உள்ள தர உறுதி (ம) ஆராய்ச்சி அலுவலக கட்டட வளாகத்தில் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எப்.1) துறை

**அரசாணை (நிலை) எண்: 207** **நாள்: 17–12–2012**

**படிக்க:**

(1) அரசாணை (நிலை) எண்.316, பொதுப் பணித் துறை, நாள் 28–10–2010.

(2) அரசாணை (நிலை) எண்.41, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 01–03–2011.

(3) அரசாணை (நிலை) எண்.249, பொதுப் பணித் துறை, நாள் 30–11–2011.

(4) முதன்மை இயக்குநர் (நெ) கடித எண்.748/தொநுகு/2011, நாள் 23–05–2012, 10–07–2012 மற்றும் 07–09–2012.

------

**<u>ஆணை:-</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சேப்பாக்கம் பொதுப்பணித் துறை வளாகத்தில், நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டிக்கொள்ள பொதுப்பணித் துறையால் தடையில்லா சான்று வழங்கி ஆணையிடப்பட்டது.

2. அதன்படி, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி ஒருங்கிணைந்த வளாகக் கட்டடம் கட்ட ரூ.13.21 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பல்வேறு அலுவலகங்கள் சேப்பாக்கம் வளாகத்தில் இயங்கி வருவதாகவும், அங்குள்ள புராதன கட்டடங்களை பராமரிக்க வேண்டியுள்ளது எனவும், அவ்வளாகத்தில் பல்வேறு வாகனங்கள் அதிகமாக இருப்பதாகவும், அங்கு புதியதாக நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்கள் கட்டினால் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடிய வாய்ப்பு உள்ளது எனவும், மேலும், பொதுப்பணித் துறையின் எதிர்கால அலுவலக வளர்ச்சிக்கும் தேவைக்கும் அதனால் பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவித்து, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட அனுமதி கைவிடப்பட்டது.

4. முதன்மை இயக்குநர் (நெ) தமது கருத்துருவில் ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர் அலுவலகத்தை சென்னை கிண்டியில், (தர உறுதி (ம) ஆராய்ச்சி) அலுவலகம் தற்போது இயங்கிவரும் கட்டட வளாகத்தில் கட்டலாம் என்றும் இதற்கு ஏற்கனவே அரசாணை எண்.41, நெடுஞ்சாலைத் துறை, நாள் 1–3–2011–ல் வழங்கப்பட்ட

ரூ.13,21,28,400/—ஐ பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் மேலும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள காலியிடப்பரப்பளவினை கருத்திற்கொண்டு, ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர்கள் அலுவலகத்தினை ஏற்கனவே திட்டமிட்ட 4 தளங்களுக்கு பதிலாக 3 தளங்களைக் கொண்டு, ஏற்கனவே நிர்வாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதே 7256 ச.மீ. பரப்பளவில் பின்வருமாறு அமைக்கலாம் என்றும் தெரிவித்து அரசாணை பெற்றுத் தருமாறும் மேலும், ரூ.13 இலட்சத்திற்கு மேற்படி கட்டட வளாகம் கட்டுவதற்கு ஆலோசகர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அரசின் அனுமதியையும் கோரியுள்ளார்.

| வ. எண் | தளம் எண். | தரை பரப்பளவு சதுர மீட்டர் | பயன்பாடு |
|---|---|---|---|
| 1 | தரை தளம் | | வாகன நிறுத்தம் |
| 2 | முதல் தளம் | 3154.50 | முதன்மை இயக்குநர் அலகு, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு மற்றும் பெருநகர அலகு |
| 3 | இரண்டாம் தளம் | 3103.53 | கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு, தேசிய நெடுஞ்சாலை அலகு மற்றும் திட்டங்கள் அலகு |
| 4 | மூன்றாம் தளம் | 997.97 | வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு |
| | **மொத்தம்** | **7256.00** | |

5. முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, தற்போது நெடுஞ்சாலைத் துறைக்கென ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர் அலுவலகத்தை சென்னை—25 கிண்டியிலுள்ள தர உறுதி (ம) ஆராய்ச்சி அலுவலகம் இயங்கி வரும் கட்டட வளாகத்தில் கட்டப்படவுள்ளதால், கட்டட வடிவமைப்பு மற்றும் இதர இனங்கள் முழுமையாக மாற்றப்பட்டுள்ளபடியால் வரைபடம் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் 3 தளங்களைக் கொண்டு 7256 ச.மீ. பரப்பளவில் ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர் அலுவலகத்தை கட்டுவதற்கும், அதற்காக ஆலோசகர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ரூ.13 இலட்சம் உட்பட ரூ.13,21,28,400/—(ரூபாய் பதிமூன்று கோடியே இருபத்தியோரு இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் என முடிவு செய்து, அரசு ஆணையிடுகிறது.

6. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "4059—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு 01— அலுவலக கட்டடங்கள் 051 — கட்டுமானம் பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் KT கட்டடங்கள் கட்டுதல் — தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலை — 16 பெரும் பணிகள்."
>
> (கு.தொ.கு. 4059-01-051-KT-1604)

7. மேலே பத்தி 5—ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் **"புதுப்பணிகள் (New Service)"** குறித்தாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு—செலவு பொது—1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து

நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணபிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும் இச்செலவிம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில், பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்கள் உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (பொதுப்பணி –1) துறைக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.64295/பொ.ப.I/2012, நாள் 03–12–2012–ல் பெறப்பட்ட இசைவின்படியும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1789 (ஆயிரத்து எழுநூற்று எண்பத்தொன்பது) உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நிரஞ்சன் மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–600005.
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு),
நெடுஞ்சாலைத் துறை, சென்னை–600005.
மாநிலக் கணக்காயர், சென்னை.18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–600008.
<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–600009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை–600009.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600009.
முதன்மை செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை
அவர்களின் தனிச் செயலர், சென்னை–600009.
நிதி (பொ.ப.I/வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை–600009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்